# ஜெயலலிதா எனும் மக்கள் முதல்வர்-ஒரு அஞ்சலி

*பரிதிமதி*

1. ஜெயலலிதா என்னும் சித்திரப் பாவையே, நீ
   சசிகலா என்பவருக்கு கைப்பாவை யானாயே.

2. மந்திர முடிச்சு ஒன்று விழுந்ததே உன்மறைவில்
   யார் அவிழ்க்கப் போகிறார்கள் அந்த பணிமுடிச்சை.

3. செல்லாதவை செலவாணியாம் நம் பணநோட்டுக்கள்
   இப்படியானது உனக்குத் தெரியவந்ததா என அறியோம்

4. நன்றாக இருந்திருந்தால் அறிக்கை விட்டிருப்பாய்
   அறிக்கை விடும் நிலையையே அழித்து விட்டனரே.

5. எப்பொழுதும் யாவர்க்குமே நீ விடுகதை
   ஆயின் உங்களுக்கு நேர்ந்துவிட்டதே பெரிய சுடுகதை.

6. இறப்பிலும் நீ ஒரு உயர்நிலையை அடைந்தாய்
   விளையாட்டுப் பிள்ளையாகவே திரைப்படம் வந்தாய்

7. சுனாமி காவிரி மழைநீர் வெள்ளம் அரசியல்சூழல்
   எல்லாம் உனக்கு சிறுபிள்ளை விளையாட்டல்லவா.

8. அடையாத குறிக்கோள்கள் ஏராளம் உன்னிடம்
   வாழ்க்கையின் மறைவில் தான் ஓய்வுகிடைத்ததோ.

9. மறைந்தாலும் நீ ஒரு தொடர்கதையாகி விட்டாய்
   உன்மறைவிலும் பிறருக்கு நீ அரசியலாகி விட்டாய்.

10. அடக்கம் செய்தபின்பும் நீதிவேண்டும் என்கிறார்களே
    முதல்வராக இருந்தபோதும் நீதி கேட்டனரே.

11. நீ மருத்துவமனைக்கு வேண்டியா சென்றாய்
    நீ மறையும் முன்பே உன்மனை புகுந்துவிட்டனரே.

12. மக்களின் நன்மைக்குப் போராடுபவர்களைக் காலன்
    நோயின்கொடுமையிலே தள்ளித்தான் மாய்ப்பானோ.

13. தமிழ்நாட்டில் பிறக்கவில்லை நீ ஆயின் உன்னுடைய
    தமிழ்மட்டும் கர்ஜித்து சபையில் ஒலிக்குமே.

14. புள்ளிவிபரம் வைத்திருப்பாய் எந்த பிரச்சினைக்கும்
    புள்ளியாய் நீமறைந்துவிட்டாய் எங்கள் மனதில்

15. எம்ஜிஆர் எப்படி தமிழ்நாட்டினை ஆண்டு மாண்டாரோ
அதேபோலே நீயும் சரித்திரம் படைத்தாய்

16. அன்னையாக அம்மாவாக தமிழ்மண்ணை வாழ்த்துவாய்
நாங்களெல்லாம் உங்களுக்குப் பிறவாப் பிள்ளைகளே.

17. அரவணைப்பு தாயிடம் கிடைக்கவில்லை யென
யாரிடமோ நீ அன்பைத் தேடி ஓய்ந்தாயோ

18. தப்புசெய்தாய் தப்புசெய்தாய் என்று சொன்னவரெல்லாம்
மனசாட்சியே உன்னைக்கொன்றதாக நினைக்கமாட்டாரா

19. கொஞ்சமாவது நீங்கள் பாதுகாப்பாக இருந்திருக்கலாம்
உங்களின் அகங்காரம் கண்ணை மறைத்துவிட்டதா

20. உங்களை மரணமடையச்செய்ய யாருக்கு மனம்வந்தது
ஏனென்றால் இது நோயில் மரணமாகும் வயதில்லையே

21. மக்களால் நான் மக்களுக்காக நான் என்று நீங்கள்
கல்லறைக்காகவே வாசகமாக வைத்திருந்தீர்களா.

22. எல்லாவற்றிலும் நீயே தனிச்சாதனை செய்வாயே
மரணத்திலும் அதை நீ காட்டிவிட்டனையே

23. தரணியிலே உனக்கு ஒப்புயர்வில்லையென
இறுமாந்திருந்தாயே உனக்கு மோசம் வந்ததே

24. கர்நாடக மண்ணில் நீவாழ இயலவில்லையெனில்
அதற்காக சிறைமண்ணை மிதித்து வந்தனையே

25. உன்னை தண்டித்து பெருமை சேர்த்தவர்
அதற்காகவே சட்டக் கல்லூரியில் பயின்றாரா

26. தன்மானம் பறிபோய் விட்டதேயென்று நீ
தன்மனம் புழுங்கியே மனம்வெந்து மாய்ந்தாயே

27. கூட்டுசேர்ந்து கொள்ளையடித்தால் சட்டத்தில்
ஒருவர் இறந்தபின் மற்றவர்தப்புவர் என்று தெரியாதா

28. கொட்டிய பாலைத்தான் அள்ளமுடியுமா
அதுபோல் தான் உன்மறைவில் அழுகிறோம் நாங்கள்

29. யாரோசெய்த குற்றம் என்று எதுஇருப்பினும்
நீ மட்டும் தமிழ்மண்ணை சபித்திடாதே